வெளியீடு எண் 300.

# தருமபுர ஆதீன மடாலய தேவாலயங்கள்

[படங்களுடன்]

GOVERNMENT ... LIBRARY
30 SEP 1953
TRIPLICANE P.O. MADRAS



T. 1927



தருமபுர ஆதீன ஸ்தாபகர்

**ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

உ

# திருக்கைலாய பரம்பரை திருத்தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

# திருக்கோயில்கள்



# தருமபுர ஆதீனம் :

அமைதியே ஆனந்தம் : ஆனந்தம் இனிமை. இனிமை பிறப்பது ஏகாந்தத்தில். ஏகாந்தமென்பது மனிதன் தனிமை யாக வாழ்வதன்று. எது இருந்தாலும் எல்லாப்பற்றையும் விட்டு இறைவனடி ஒன்றையே பற்றிநிற்பதுதான் ஏகாந்தம். இதனாலேயே இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றார்கள். ஏகாந்த வாழ்வுக்கு ஏற்ற இடம் தவச்சாலை தவச்சாலைக்கு இடையறாது ஓடுகின்ற ஆறும், இனிய நீழலும், கனிதரும் மரங்களும், பூத்துக்குலுங்கித் தெய்வமணங்கமழும் செடி கொடிகளும் தேவை. அதனடுவிலே ஆடுகின்ற மனத்தை அசையாமற்செய்யும் ஆலயமும் தேவை. இத்துணை அழகும் நிறைந்த இடம் அகஸ்தியாச்சிரமம். சிவமணம் கமழும் வில்வமர நிழல். அதனிடையே யமனுக்கும் வரங்கொடுத்த ஆண்டவன் அபயாம்பிகையொடு எழுந்தருளியிருக்கிறார். தங்கருமஞ் செய்யும் தவமுனிவர்கள் நாலைந்துபேர் கயிலை செல்லும் கருத்தொடு காத்திருக்கிறார்கள்; தங்கள் தலைச் சுமையைத் தாங்கும் ஒருவரை எதிர்நோக்கி.

ஒருநாள் விடியல். ஒரு சிவாநுபூதிச்செல்வர் பேரொளி விளக்கும் பூசைப்பெட்டியுடன் தேஜஸ்நிறைந்த முகத்தோடு எழுந்தருளுகின்றார். முனிவர்கள் தங்கள் சுமையை அவர்க ளிடம் ஒப்புவிக்கிறார்கள். 'இன்றுமுதல் இவ்வாலயத்தையும் பல சிவாலயங்களையும் பரிபாலனஞ்செய்து உபதேச குரு மூர்த்தியாக விளங்கித் தென்தமிழ்நாடு உய்ய, தொடர்ந்த பரம்பரையாக நிறுவி வாழ்க' என்று ஆசீர்வதித்துக் கயிலை செல்கிறார்கள். குருநாதன் கருணையாலும், தவமுனிவர்கள் தண்ணளியாலும் அருளும் பொருளும்பெருகி ஆதீன ஸ்தாபக ராகக் குருஞானசம்பந்த சுவாமிகள் விளங்கினார்கள். இது கி. பி. 1561-க்கும் கி. பி. 1566-க்கும் இடைப்பட்ட காலத்து நிகழ்ச்சி.



கி. பி. 1570-ல் ஆனந்த பரவச மூர்த்திகட்கு அபிஷேகம் செய்வித்துக் குரு ஞானசம்பந்தப்பெருமான் சிவாத்துவித நிலையை எய்த இருக்கின்ற நேரத்தில், கனிந்தபழம் கொம்பைவிட்டு நழுவுவதுபோல உபதேசம் கேட்ட அக்கணமே சிவாத்துவிதப் பேரின்ப நிலையை அடைந்தார்கள் ஆனந்த பரவசமூர்த்திகள். அவர்களுடைய ஆலயத்தை இதோ பாருங்கள் எவ்வளவு உயர்ந்த கோபுரம்.

நான்காம் குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தப் பெருமான், ஆனந்த நடராச மூர்த்தியின் ஆனந்த தாண்டவத்தின் அநுபவப்பொருளை அறிவித்து, ஸ்ரீ காசிமடத்து முதல்வராகிய தவச்செல்வர் குமரகுருபர முனிவரை ஆட்கொண்டார்கள்.

பத்தாவது குருமூர்த்திகள் சிவஞானதேசிகர் அவர்களால் மடமும், ஆலயங்களும், தீர்த்தங்களும் திருப்பணி செய்விக்கப்பெற்றன. மடாலயத்து உயிர்நாடியாகிய சொக்கலிங்கப் பெருமான் பூஜைமடமும் சித்தர்கட்டும் புதிதாகக் கட்டப்பெற்றன.

இப்பத்து குருமூர்த்திகள்காலமே ஞானாவரண விளக்கவுரை, முத்தி நிச்சயப் பேருரை, பண்டார சாத்திரங்கள், தோத்திரங்கள் முதலிய சிவாநுபவ நூல்கள் எழுந்தனவாம்.

இவ்வாதீனத்துப் பரிபாலனத்தில் பின்னர் குறிப்பிடப் பெறும் இருபத்தேழு தேவஸ்தானங்களும் விளங்குகின்றன. ஒவ்வொன்றாகப் படித்துப்பாருங்கள்.

## வைத்தீஸ்வரன்கோயில்:

இந்தத் தோற்றம் உங்கள் மனத்தைக் கவரவில்லையா? இவ்வளவு அடர்த்தியான மரம் எது? இது எங்கே இருக்கிறது? என்று அறிந்துகொள்ள அல்லவா பரபரப்பு



உண்டாகும். இது வேப்பமரம். வைத்தீஸ்வரன்கோயிலில் கீழக்கோபுர வாசலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. கடவுள் வைத்தியநாதராக இருப்பதால் வேப்பமரத்தடியில் அவர் விளங்குவது இயற்கைதானே.

**பிரார்த்தனை ஸ்தலம்:** இங்கே உள்ள தெய்வங்கள் கலிகாலத்திலும் கண்கண்ட தெய்வங்களாக—கருத்து நிறைவேற்றிவைக்கும் கருணையாளர்களாக இருப்பதால் எல்லாச் சந்நிதிகளுக்கும் மிக்க விசேஷம் உண்டு.

**சுவாமி வைத்தியநாதர்:** 'தீராத வல்வினைநோய் தீர்த்தருள்வான் என்று தேவாரங்கள் போற்றுகின்றன.

தையல்நாயகியோ சித்தாமிருதத் தீர்த்தத்தில் தோய்ந்து வருகின்ற தென்றற்காற்றை அநுபவித்துக்கொண்டு கருணைத் திருக்குறிப்போடு வீற்றிருக்கின்றூர். இங்கே பேய் பிசாசு பிடித்தவர்கள் வந்தால் தாமாக ஆடத்தொடங்கிவிடுகிறூர்கள்.

**முத்துக்குமாரர்:** பிறவிநோய் தீர்த்துவைக்கும் பெருமானுக்கும், மனநோய் தீர்க்கும் அம்மைக்கும் அவதரித்த பிள்ளை கலிநோய் தீர்க்கும் கந்தன். செல்வமுத்துக்குமாரன் என்பதுதான் அவரது திருப்பெயர்.

இவருக்குக் கார்த்திகைதோறும் மகாபிஷேகம் நடைபெறும். ஜனசமுத்திரம் பன்னீர் மழையை வெள்ளி அண்டாக்களில் கொண்டுவந்து நிரப்பும். பாலைக் கொண்டு வந்து சொரியும். செல்வமுத்துக்குமாரர் அபிஷேகம் கொண்டருளியபின் அவற்றை வாங்கி உட்கொள்ளும். இது ஒரு அற்புதமான கண்கொள்ளாத காட்சி.

பச்சைக் கற்பூரமும் குங்குமப்பூவும் சமனெடையாகச் சந்தனத்தில் கலந்து செல்வ முத்துக்குமாரர் திருவடியிற் சாத்துவது வழக்கம். இதற்கு நேத்திரப்பிடிச் சந்தனம் என்றுபெயர். இதனைத் தினந்தோறும் நெற்றியிலணிந்தால் ராஜவசியமும், சர்வஜன வசியமும் உண்டாகும். உண்டால் குன்மம் முதலிய வியாதிகள் நீங்கும்.



சித்தாமிர்த தீர்த்தத்தின் அழகைப் பாருங்கள். தெளிந்த நீர். நடுவே நீராழி மண்டபம், அம்பாளின் அருட்கண் முழுதும் பதிகின்ற இடம். இதில் தவளையே இல்லாதது தனிச்சிறப்பு. ஒவ்வொரு கார்த்திகையிலும், செவ்வாய்க் கிழமையிலும் பிரார்த்தனைக்காக உருண்டைவெல்லத்தைக் கரைப்பார்கள். அவர்களது கட்டி கரைந்துவிடும். இதில் நியமமாக நீராடினால் செங்குட்டம், வெண்குட்டம் முதலிய சர்மரோகங்கள் நீங்கும்.

அங்கசந்தான தீர்த்தத்தின் மண்ணைச் சுக்கிலபட்சத்தில் நல்ல நேரத்தில் எடுத்துப் புதுப் பாத்திரத்தில் வைத்துக் கொள்வார்கள். சடாயு குண்டத்திலுள்ள விபூதியும் அதனோடு கலப்பார்கள். சித்தாமிர்தத் தீர்த்தத்தைச் சேர்த்துப் பிசைவார்கள். முத்துக்குமாரசாமிச் சந்நிதியிலுள்ள குழியம்மியில் போட்டுப் பஞ்சாக்ஷரத்தைக் கூறிக்கொண்டு ஆயிரத்தெட்டு தடவை அரைப்பார்கள். கடுகளவாக உருட்டிக் காயவைத்து தையல்நாயகியின் திருவடிகளில்வைத்து அருச்சித்து அளிப்பது வழக்கம். இது தான் திருச்சாந்துருண்டை என வழங்குகிறது.

இது சீதையைத்தேடித் தென்னிலங்கைசென்ற ஸ்ரீராமன் சடாயு பக்ஷிக்குத் தகனக்கிரியை நடத்திய தலம்.

சடாயு சம்பாதி பறவைகளும், இருக்குவேதமும், முருகனும் பூசித்திருக்கிறார்கள். ஆதலால் தேவாரத்தில் இத்தலம் புள்ளிருக்கு வேளூர் எனக் குறிக்கப் பெறுகிறது.

Govt. Oriental Mss. Library
Triplicane P.O., Madras



பங்குனிமாதத்தில் பிரம்மோத்சவம். தைமாதம் முத்துக் குமாரசுவாமி திருவிழா. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர் வெள்ளித் தேரில் எழுந்தருளி வருகிறார் பாருங்கள்.




இதுதான் சீகாழியிலுள்ள கட்டுமலை உச்சிக்கோயில். இதனுள்ளே ஒரு தோணியில், அம்மனும் சுவாமியும் இருக்கிருர்கள். இவர்களுக்குப் பெரியநாயகர், பெரியநாயகி என்று பெயர். ஆம். பெரியநாயகர்தான். கருணையால் மட்டுமல்ல; உருவத்தாலும். திருஞானசம்பந்தர், குழந்தைப்பருவத்தில், குளக்கரையில் இருந்து அழுதபோது இவர்கள்தாம் ஞானப்பால் கொடுத்த நல்ல தாய் தந்தையர்கள்.

தோணியப்பர் சிகரத்துக்குத் தெற்குப் பக்கத்திலே உச்சியில் தெரிவது சட்டநாதர்கோயில். அநேகருக்குக் குல தெய்வமாக விளங்கும் மூர்த்தி. பயிரவவடிவம். இங்கே சுக்கிரவார அர்த்தசாமத்தில் வழிபாடு செய்வார்கள். இந்த

மலைக்கு வழிபட வருவோர் பூ முதலியவற்றை அணிந்து கொண்டு ஆசாரக்குறைவாக வருவது வழக்கமில்லை. இவருக்குப் புனுகுச்சட்டமும் வடைமாலையும் சார்த்தி வழிபடுவது வழக்கம்.

இன்னும் சற்று உற்றுப்பாருங்கள். மண்டபமும் அதன் முன்பு திருக்குளமும் தெரிகின்றதல்லவா; இதுதான் பிரம தீர்த்தம். இதன் கரையிலேதான் தெய்வத்தமிழ் பிறந்தது. திருஞானசம்பந்தர் ஞானப்பால் குடித்த வாய்மணக்க நற்றமிழைச்சொல்லி நாட்டை உய்யவைத்தார்.

ஞானசம்பந்தருக்குத் தனி ஆலயம் இருக்கிறது. ஞானசம்பந்தர் கண்கண்ட தெய்வம். கருத்து வளர்க்கும் தெய்வம். இசைகலந்த இனியதமிழால் நாட்டை ஈடேற்றவந்த தெய்வம்.

இத் திருக்கோயிலில் மூன்றும் குலோத்துங்கனது அடுக்களைப் பெண்களுளொருத்தியாகிய இராஜவிச்சாதரியினுடைய பொருளாலும், இரண்டாம் இராஜராஜன் காலத்திலே கங்கைகொண்ட சோழபுரத்தான் ஒருத்தனாலும் திருப்பணியும் திருவிழாவும் செய்விக்கப்பட்டன.

மற்ருெரு ஆச்சர்யமான செய்தி: இரண்டாம் குலோத்துங்கன் சிம்மாசனமேறிய நான்காம் ஆண்டில் சம்பந்த சுவாமிகள் கோயிலில் ஒரு தமிழ்விரகர் (வித்துவான்) நியமிக்கப் பெற்ருராம். அவருக்கு வேலை திருமுறை ஏடுகளைப் பாதுகாத்துக் கொள்ளுதலும், புதுப்பித்தலும், பூசித்தலுமேயாம்.

**ஞானபூமி:** ஞானசம்பந்தர் அவதார ஸ்தலம் என்பதால் மட்டுமல்ல. காழிக் கங்கை மெய்கண்டார், சீகாழிச் சிற்றம்பல நாடிகள், சண்பை ஞானப்பிரகாசர், சீகாழி மறை ஞானசம்பந்தர் இவர்களும் இங்கே அவதரித்தவர்கள்.

## திருப்பனந்தாள் :

பெயரைக்கொண்டே கடவுள் பனைமரத்தடியில்வீற்றிருக்கின்றார் என்று தெரிகின்றதல்லவா? இதோ பனைமரங்களையும் பார்க்கிறீர்கள். இவை உட்பிராகாரத்தில் இருக்கின்றன.

சுவாமி செஞ்சடையப்பர்.
அம்மை பெரியநாயகி.



ஒருகால் அம்மையாருக்கு ஒரு ஆசை உண்டாயிற்றாம். "ஜனகாதியர்கள், நமது கணவன் தக்ஷிணாமூர்த்தியாய் இருந்தபோது உபதேசம் பெற்றார்களே! நாமும் பெறலாகாதா" என்று.

கடவுள் 'திருப்பனந்தாள் சென்று தவஞ் செய்தால் சித்திக்கும்' என்றார். அம்மையும் அவ்வாறு இங்கு வந்து தவஞ்செய்து ஞானோபதேசம் பெற்றார் என்பது வரலாறு.

ஒரு அசுரன்மகள். தாடகை என்பது அவளுக்குப்பெயர். அவளுக்குப் பிள்ளையே இல்லை. பிரமனை நோக்கித் தவஞ் செய்தாள். பிரமன் உத்திரவுப்படி வந்து செஞ்சடையப்பரை வழிபட்டாள். ஒருநாள் பூசைமுடிவில் மாலையைச் சாத்த எழுந்தபோது அவளன்பை உலகறியச்செய்வதற்காக அவள் மேலாடை நழுவச்செய்தார் கடவுள். நாணத்தை அணியாகக் கொண்ட நங்கையோ முழங்கைகளால் ஆடையை இடுக்கிக் கொண்டே மாலையைச் சாத்தினாள். பெருமான் தலை வணங்கி மாலையை ஏற்று இடபாரூடராகக் காட்சியளித்தார்.



இந்த நாககன்னிகை தீர்த்தத்தில் கார்த்திகை மாதத்து வெள்ளிக் கிழமைகளில் அம்மையார் தீர்த்தம் கொடுக்கும் போது மூழ்கினல் மணம் ஆகாதவர்களுக்கு அடுத்த ஆண்டே மணம் நிகழும்.

இங்கு வழிபட்டுப் பேறுபெற்ற நாககன்னி கையால் இந்தத்தீர்த்தம் உண்டாக்கப்பட்டது.

பெரிய புராணத்தில் குங்குலியக்கலய நாயனர் என்ருெரு பெரியவர் கூறப்படுகிருரே. அவர் அரசனுலும் ஆகாத காரியத்தையும் அன்பினுல் ஆக்கிவைத் தார் என்ற நிகழ்ச்சி இந்தக் கோயி லில்தான் நிகழ்ந்தது. சாய்ந்த சிவலிங் கத்தை வழிபடக் கூடாதென்ற சோழ மன்னனிடம் மக்கள் முறையிட்ட போது மன்னன், சாய்ந்த பெருமானை நிமிர்க்கத் தன்னுல் முடிந்தவரை முயன்ருன். யானை சேனைகளைக் கொண்டும் இழுக்கச் செய்தான். இதனையறிந்த குங்குலியக்கலயர் ஒரு சிறு கயிற்றைக் கழுத்திலும் சிவலிங் கத்திலும் கட்டிக்கொண்டு இழுத்தார். சிவலிங்கம் நிமிர்ந்தது. கடவுள் சிவ லிங்கத்தினின்றும் வெளிப்போந்து காட்சியளித்தார். இந்த நிகழ்ச்சிகளைக் காட்டும் சிற்பங்களில் இதுவும் ஒன்று.



# திருக்கடவூர் :

இந்த ஊர் பலபேர் ஞாபகத்தில் உள்ளது. சஷ்டியப்த பூர்த்தி சாந்தி, சதாபிஷேக சாந்தி, மிருத்தியுஞ்சய சாந்தி, அவமிருத்யு பரிகார தோஷ சாந்தி இவைகளைச் செய்வதற்குப் பலர் இங்கே வருகிறார்கள். இங்கே எழுந்தருளியுள்ள காலசங்காரமூர்த்தியைக் கண்டவுடன் எல்லாவிதமானமிருத்யு தோஷங்களும் விலகிப்போகின்றன. உதைபட்ட காலன் திருவடிக்கீழ் உருண்டுகிடக்க, வரம்பெற்ற மார்க்கண்டர் கைகூப்பி வாழ்த்திநிற்க, சாக்ஷியாக வாலாம்பிகை கருணைக் கண்கொண்டு நோக்கிநிற்க, காலசங்காரப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற காட்சியைக் கண்ட நமக்கெல்லாம் ஒரு துணிவு பிறப்பது இயற்கைதானே. சங்கவெண்குழையோர் காதில் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்ம் மலர்ச் சேவடியிணையே குறுகினோம் ஆதலின் நாம் நமனை அஞ்சோம்; நமனை அஞ்சோம்.

இவ்வண்ணம் காலசங்கார மூர்த்தியை நாமெல்லாம கண்டுகளிக்கக் காட்டிய பெருமான் யார்? மார்க்கண்டேயரல்லவா; அந்த மார்க்கண்டர் திருமயானத்திலுள்ள கங்கையைக் கொண்டுவந்து நீராட்டி, பிஞ்சலம் என்னும் சாதிப் பூவைக்கொண்டு அருச்சித்து அமுதகடேசப் பெருமானை வழிபட்டார். அமுதலிங்கத்தினின்று காலசங்கார மூர்த்தி வெளிப் பட்டுக் காலனைச் சங்கரிக்க இருப்பதை இதோ பாருங்கள். மார்க்கண்டர் இலிங்கத்தைக் கட்டி அணைத்துக்கொண்டு இருக்கிறார்.



அபிராமி கண்கண்ட தெய்வம். அழகுக்கொருவரும் ஒவ்வாத செல்வி; எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் ஈன்றருளும் வள்ளல்நாயகி. அபிராமிபட்டர் என்னும் அன்பருக்கு அமாவாசையிலும் சந்திரோதயம் காட்டி, அபிராமி அந்தாதி என்னும் பாமாலை சூட்டிக்கொண்ட செல்வி. இந்தத் தாயின் சந்நிதியில் இன்றைக்கும் எவர் வந்தாலும் இன்னல் நீங்கி இன்புறுவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. இங்குள்ள விநாயகர் கள்ளவாரணப் பிள்ளையார். இவரும் வரதர்.



இதுதான் அமிர்தபுஷ்கரணி தீர்த்தம். இதோ கிழக் கோபுரத்தை அடுத்து உட்புறமாக இருக்கிறது. நீரின் தெளிவு கோபுரத்தின் சாயலைக் காட்டுகின்றதல்லவா? இதில் சித்திராபூர்ணிமையிலும், வெள்ளிக்கிழமையிலும் நீராடினால் எல்லாச் சித்திகளையும் எய்தலாம். இந்தத் தலத்தில் பெரிய புராணத்தில் சொல்லப்பட்ட குங்குலியக்கலய நாயனாரும், காரி நாயனாரும் அவதரித்தவர்கள்.

## திருப்பறியலூர் :

உயரமாகத் தெரிகின்ற கருப்பக்கிருக விமானத்தில்தான் மூலமூர்த்தி வீரட்டேஸ்வரர் எழுந்தருளியிருக்கின்றார்.

இந்த ஊருக்குச் சென்றால் போதும். அவ்வளவுதான். சென்றவர்கள் பாவத்தையெல்லாம் இறைவன் பறித்துக் கொள்வாராம், பெருமானுக்கு எவ்வளவு கருணை பாருங்கள், தாரகனால் உண்டாகிய பயத்தைத் தேவர்கள் பறிகொடுத்ததும் இங்குதானாம். மற்றொரு சிறப்பும் உண்டு இதற்கு. அதுதான் தட்சயாகம் நடைபெற்ற இடமாக விளங்குவது. அட்டவீரட்டத் தலங்களுள் இதுதானே 'மாமன் பறியல்' என்று முதலாவதாக எண்ணப்படுவதாக இருக்கின்றது, பெருமானை மருமகனாகப் பெறும் பாக்கியம்பெற்றும் அவரை மதியாமல் தக்கன் யாகஞ்செய்தபோது விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும் வந்து கலந்து கொண்டார்களல்லவா? அப்பொழுது வீரபத்திரக் கடவுள்தானே தோன்றி தக்கன் தலை தடிந்து யாகத்தையும் அழித்தனர். அந்த வீரபத்திரமூர்த்தியை இன்றும் இங்கு காணலாம்.

தக்கன் யாகம்நடத்திய இடம் இதுதான் என்பதற்குக் கோயிலின் தென்பாகத்திலுள்ள தீர்த்தமும் சான்றாகும். அத்தீர்த்தம் கரிக்குளம் என்ற பெயரால் இன்றும் வழங்குகிறது. கோடைக்காலத்தில் சென்று குளத்தைத் தோண்டிப் பார்த்தால் தோண்டத்தோண்டக் கரியாகவே இருப்பதைக் காணலாம். இது இப்போது பரசலூர் என வழங்குகிறது.



# குத்தாலம் :



கோபுரத்தின் பக்கத்தில் அடர்த்தியான பெரிய மரம் தெரிகிறதல்லவா! இதுதான் உத்தாலமரம். இதனை வேறு எங்கும் காணமுடியாது. ஆதலால் உத்தாலந்தான் குத்தாலமா யிருக்கலாம். திருத்துருத்தி என்று தேவாரம் குறிப்பிடு கிறது. தாம் விதித்த விதியில் தாமும் நடந்துகாட்ட வேண்டியே பெருமான் முறைப்படி அம்மையை மணந்து சொன்னவாறறிவாராயினர். இவர் மணவாளநாதராக நறுஞ் சாந்திள முலையாருடன் இன்றும் எழுந்தருளியிருக்கின்றார். இந்த ஆலயத்தை கல்யாண ஆலயம் என்று கல்வெட்டு குறிப் பிடுகிறது. இப்பெருமானுக்குத் துணைவந்த மகனார் துணை வந்த விநாயகராகிவிட்டார்,

வித்துவன்மாலியோடு போர்செய்து தோற்ற சூரியன் இங்குப் பூசித்துப் பேறுபெற்றதால் ஞாயிறு வழிபாடு இன்றும் சிறப்புடையதாக நடைபெறுகின்றது. அதிலும்

கார்த்திகை ஞாயிறுகளில் காவிரி தீர்த்தம் மிக விசேஷம். மூழ்கினார் பாவத்தைப் போக்கிவிடும். ஆடுவார் பாவம் தீர்த்து அஞ்சனம் அலம்பித் திகழுமா காவிரி கம்பீரமாக ஓடுவதைப் பாலத்திலிருந்து பாருங்கள்.

Library



செம்பியன்மாதேவியார் திருப்பணி செய்வித்த ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். கி. பி. 1630-ல் சிதம்பர தீக்ஷிதர் அம்மையார் ஆலயச் சுற்றுமதிலையும், காவிரிக்குச்செல்லும் திருமஞ்சன வீதியையும் அமைத்திருக்கிறார்.

இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கிய சுந்தரர் நோய் நீக்கம் பெற்றார். இத்தீர்த்தம் ஆலயத்தினுள் இருக்கிறது. பெயரோ சுந்தர தீர்த்தம். என்ன அருமையான பெயர்.

# திருநின்றியூர் :



கோயிலைக்கண்டாலே ஒரு வசீகரம். பலிபீடம் முதலில் ; அடுத்து அழகான மண்டபம். இப்படி ஒவ்வொன்றாகக் கோயில் முழுவதுமே அழகாக இருப்பதைக் காணுங்கள்.

எல்லா ஊரிலுமே பெருமான் நித்யவாசம் பண்ணுகின்றாரானாலும் இந்த ஊரில்தான் பெருமானுக்கு மிகவிருப்பமாம். இதைத்தான் 'இடமாவது திருநின்றியூரே' 'நின்றியூரில் உறையும் இறை' 'நின்றியூரின் நிலையார்' என்றெல்லாம் தேவாரப் பகுதிகளும் காட்டுகின்றன.

இன்னும் திருமகள் வழிபட்டதால் திருநின்றவூர்தான் இப்படித் திருநின்றியூராயிற்றோ என்று எண்ணவும் இடம் தருகின்றது. வழிபாட்டுக்கு வந்த ஒரு சோழன் கையில் கொண்டுவந்த திரி நின்றுவிட, பெருமான் சோதிவடிவாகக் காட்சியளித்ததால் திரிநின்றவூர் என்றும் சொல்வார்கள்,

## திருத்தருமபுரம் :



இதோ யாழ்மூரி நாதர் திருவுருவத்தைப் பாருங்கள். கையிலே யாழை ஏந்திக்கொண்டு உலகத்தை நாதத்தால் வசீகரிப்பவராக விளங்குகிறார். இவருடைய சத்தியார் மதுரமின்னம்மை.

திருஞானசம்பந்த சுவாமிகளோடு யாழ் வாசித்துக் கொண்டே வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய தாயார் பிறந்த ஊர் இது. யாழில் அமைக்க முடியாதபடி ஞானசம்பந்தப் பெருமான் யாழ்மூரி நாதப் பெருமானைத் தோத்திரித்தார்.

இது முதல்திருமுறையில் யாழ்மூரிப்பண் என வழங்குகிறது. இத்தலம் இன்று பிரஞ்சிந்தியாவிலுள்ள காரைக்காலுக்கு மேல்பால் ஒரு மைல் தொலைவிலுள்ளது.

# திருவையாறு:

சப்தஸ்தானத் திருவிழா என்றால் உடனே திருவையாறு மூலஸ்தானந்தானே அன்பர்கள் நினைவுக்கு வரும். கயிலை காணச்சென்ற அப்பமூர்த்திகள், வழியில் இறைவன்காட்டிய குளத்தில் மூழ்கி, இதோ தெரிகின்ற குளத்தில்தான் எழுந்தார். கயிலைக் காட்சி கண்டார். 'யாதும் சுவடுபடாமல் ஐயாறடைந்து தான் காட்சிகண்டதாக அவரே ஆனந்தமாகப் பாடுகிறார். சுயம்புமூர்த்தியாகிய மூலப்பெருமானைச் செம்பொற்சோதியாகக் கண்டார்.

காவிரி வெள்ளம் கரைகடந்து பெருகுவதைப் பார்த்த சுந்தரர்பெருமான் 'காவிரிக் கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ' எனத் தென்கரையில் நின்றுகொண்டு கூவி அழைக்கின்றார்.

இக்கோயிலுக்குக் காவிரிக் கோட்டமென்று சமயாசாரிய பெருந்தகையார்கள் பெயரிட்டிருக்கிறார்கள். காவிரியின் இருகரைகளிலும் பல தலங்கள் இருப்பினும் இதற்குக் காவிரிக் கோட்டமென்று பெயர் வந்தது இதன் தனிச் சிறப்பை விளக்குகின்றதல்லவா?





இதுதான் சூரியபுஷ்கரணி. அகத்தியர் இதில் மூழ்கி வழிபட்டுக் குறுமுனியாம் பேறுபெற்றார். அதுமட்டுமா அப்பர் அங்கு மூழ்கி இத்தலத்தில் எழுந்ததுபோல, குறுமுனியும் இக்குளத்தில் மூழ்கி, கயிலையையடைந்தார்.

பெருமானைப் பூசித்துவந்த ஆதிசைவர் இருபத்து நால்வரில், காசிசென்ற ஒருவருக்காகப் பெருமானே சிவ வேதியராகவந்து தன்னைத்தான் பூஜித்துக்கொண்டார். 5-ந் திருவிழாவில் இக்காட்சியை இன்றும் காணலாம். சிலாதமுனிவரின் மகனாரான திருநந்திதேவர் உபதேசம்பெற்று, சிவ கணத் தலைவராம் பதவி பெற்றதும் இங்குதான்.

தெற்குக் கோபுரவாயிலில் விளங்கும் ஆட்கொண்டார் மிகச் சிறந்தமூர்த்தி. சுசரிதனுக்கு இயமபயம் போக்கியவர். இவர் சந்நிதியில் எப்பொழுதும் குங்குலியப்புகை கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

அம்மையார் தர்மஸம்வர்த்தினி, மிக அழகான ஆலயம் இங்குள்ள ஜபேச மண்டபத்தில் ஜபம் செய்வோர் பெரும் பயன்பெறுவர்- ஆலயத்திலுள்ள மண்டபங்கள், மதில்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மன்னராலும் கட்டப்பட்டன என்று கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. முதலாம் ராசராசனது மனைவி ஒலோகமா தேவியார் கட்டிய கோயில்தான் ஒலோகமாதேவீச்சரம். அதுதான் உத்தரகயிலாயம்.

## மணக்குடி :



பெயரைக் கேட்டவுடனே மணலெலாம் இங்குக் குடி கொண்டு விட்டதோ என்று நீங்கள் எண்ணலாம். அதுவும் சரிதான். காவிரிக்கு அருகில் கோயில் இருந்தால் இடம் மணற்பாங்காகத்தானே இருக்கும். ஆனால் புராணம் எப்படிச் சொல்கிறது பாருங்கள்.

உமாதேவியைத் திருமகளாகப் பெறவேண்டும் என்று இமவான் கடுந்தவம் செய்தானும். அப்படியே அம்மையும் அவதரித்தாள். ஆனாலும் மகளைப்பெற்ற ஆனந்தத்தைக் காட்டிலும், மகள் அழகுக்கு ஏற்ப மணாளன் கிடைக்க வேண்டுமே என்ற கவலை அதிகமாயிற்றும் அவனுக்கு, 'உனக்கு ஏன் கவலை' என்று சொல்லிவிட்டுத் தவஞ்செய்தாள் அம்மை. அப்பனும் அம்மைமுன் தோன்றி மணவாளனாக வந்து மணமுடித்துக் கொள்ளுகிறேன் என்று சொன்னாராம். அப்படியே மணமுடிக்க முகூர்த்தநாளும் குறித்தாகிவிட்டது. மணவாள கோலத்தோடு வந்த பெருமான், இங்குத் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டார். வேண்டுமானால் இன்றைக்கும் பெருமான் சுந்தரேசராகக் குடியிருப்பதைச் சென்று பார்க்க லாம். இங்குள்ள நடராஜப்பெருமான் திருவுருவம் பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும். அதோ ஒருபக்கமாகத் தெரிகிற விமானத்திற்குள் தான் அவர் எழுந்தருளியிருக்கிறார்.

## கருங்குயில்நாதன்பேட்டை:



நோயாளிகள் இன்றைக்கும் ஒரு மண்டலம் அல்லது அரைமண்டலம் இதோ காணப்படுகின்ற தீர்த்தத்தில் மூழ்கி நன்மையடைகின்றார்கள் என்றால் பாடல்பெறாத தலம் என்று எப்படிப் புறக்கணிப்பது! தக்கனது யாகத்தில் தேவர்களெல்லாம் தப்பியோடினார்களல்லவா! அதில் இந்திரன் கருங்குயிலாகமாறி ஓட்டம் பிடித்தான். ஓடிய அவன் குரு உபதேசப்படி இங்குவந்து இக்குளத்தில் மூழ்கிப் பாபத்தைப் போக்கிக்கொண்டான்.

சப்தமாதருள் ஒருத்தி பூசித்து வழிபட்டிருக்கிறாள். ஆனால் நீங்கள் கோயிலுக்குள்ளே சென்று பார்த்தால் சப்தமாதர்களையுமே தரிசிக்கலாம். இப்படியெல்லாம் பெருமான் சத்தியைக் கொடுப்பதால்—சத்தியால் பூசிக்கப்பட்டதால் சத்திபுரீஸ்வரராக எழுந்தருளியிருக்கிறார். இறைவிபெயர் ஆனந்தவல்லியாம். என்ன அழகானபெயர், சொல்லச்சொல்ல ஆனந்தம் பிறக்கிறதல்லவா?

# திருவிள நகர் :

அருள்வித்தன் என்ற பிராமணன் காவிரி வடகரையில் போய் தினந்தோறும் பூவெடுத்து வருவது வழக்கம். ஒருநாள் விடியல் பூவெடுத்துக்கொண்டு திரும்புகிறுன். காவிரி கரை புரண்டு ஓடுகிறது. ஐயோ! காலசந்தியாகிவிடுமே; பூவில்லாத் திருமேனியையா அடியார்கள் பூசிப்பது என்ற கவலை பிராமணனுக்கு, கவலைதீர்க்கும் மருந்தாகக் கடவுள்தோன்றி 'இதுதான் இறங்குதுறை' என்று காட்டிமறைந்தார். அதனுல் துறைகாட்டும் வள்ளலார் ஆயினுர் பெருமான். இந்தப் பெயரை மறுபடியும் ஒருமுறை புதுக்கிக் கொண்டிருக்கிறுர். எப்போது தெரியுமா?



கடைமுடி முதலான தலங்களை வணங்கிக் கொண்டு திருஞான சம்பந்தர் இங்கு எழுந்தருளினுர். அப்போதும் காவிரிப்பெருக்கு. கரை கடந்தால்தான் விளநகர் வள்ளலை அடையலாம். என்செய்வோம் என்று திருஞானசம்பந்தர் கவலையுற்றபோது இறைவன் வேடனுக வந்து துறை காட்டி மறைந்தாராம். அவர் எழுந்தருளியிருக்கின்ற கோயிலினுடைய முன்கோபுரம் இதுதான். கண்டு தரிசியுங்கள்.

உத்தமசோழன் பட்ட மகிஷியான உத்தம சுரபியாள் நித்திய பூஜைக்காக நிறைய நிலங்கள் அளித்து அன்பை வெளிப்படுத்திய தலம் இது. அச்சுதப்ப நாயக்கர்தான் இக்கோயிலைப் பிற்காலத்துத் திருப்பணி செய்வித்தவர்,

# திருநள்ளாறு:

சனிப் பெயர்ச்சியின்போது எல்லார் நினைவுக்கும் வரும் தலம் இது. நளமகாராஜா தன்னைப்பிடித்த கலிநீங்க நாரதர் உபதேசப்படி தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டானல்லவா! அப்படியே அவன் இங்கு வந்ததும் நளதீர்த்தத்தில் நீராடி நள்ளாறரை வழிபட்டான். பிடித்த சனி விலகிற்று. நளன் பெயர் சொன்னுரைக்கூடத் தீண்டுவதில்லை என்று உறுதி செய்து கொடுத்துவிட்டு, இந்தத் தலத்திலேயே சனிபகவான் எழுந்தருளியிருக்கிறுர். இங்குள்ள அம்மையார் போகமார்த்த பூண்முலையார்.

இந்தவூர்ப் பதிகத்தைத்தான் ஞானசம்பந்தர் மதுரையில் சமணரோடு வாதுசெய்தபோது நெருப்பிலிட்டது. அப்போது இப்பதிகம் வேகாமலிருந்து சைவத்தின் மேன்மையை விளக்கியதால் பச்சைப்பதிகம் என வழங்கப்படுவதாயிற்று.

இந்த ஸ்தலம் சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. தியாகராஜர் நகவிடங்கத் தியாகர். இவர் ஆடுகின்ற நடனமோ உன்மத்த நடனமாம். உன்மத்தம் என்றுல் தெரியுமல்லவா? பித்தேறியவன் கூத்துத்தான்.

வைகாசி உத்திரட்டாதியில் கொடியேறி பதினெட்டு நாள் உத்ஸவம் சிறப்பாக நடக்குமாம்.

பிரஞ்சிந்தியாவைச் சேர்ந்த இக்கோயிலின் நிர்வாகக் குழுவின் தலைவராக, ஆதீனத்தின் பிரதிநிதியாகிய கட்டளை சுவாமிகளை நியமிக்கும் வழக்கத்தைப் பிரஞ்சு அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. பூஜை முதலிய வைதீகக் காரியங்களையும், பொது நிர்வாகத்தையும் முழுப்பொறுப்புடன் கவனித்துவரும் உரிமை சுவாமிகளுக்கு உண்டு,



# பேரளம்:

இக்கோயில் முழுவதுமே வௌவால்நத்தி மண்டபமாகக் காணும்போதே பழங்காலத்துக் கோயில்களுள் இதுவும் ஒன்று எனச் சந்தேகமில்லாமல் சொல்லிவிடலாமல்லவா! பேரள முனிவர் இங்கு பூசித்து வழிபட்டார் என்பது வரலாறு. இதற்கேற்ப இன்றும் அம்முனிவர் பெருமானைத் திருமாளிகைப் பத்தியில் கண்டு தரிசிக்கலாம். மந்தர மன்னன், கனகல மன்னன், வங்கதேசத்து அந்தணன் முதலியோர்களும், தேவர்களுங்கூட இங்கு வழிபட்டிருக்கிறார்கள். மற்றொரு அற்புதமும் இங்கு நடந்திருக்கின்றதாம்.

சிவபக்தி மிக்க கார்ஷுணஜன முனிவர் என்பார் செய்த பூஜைக்கு உகந்த சிவபெருமான் கருப்பக்கிருகக் கல்லில் உலகத்திலுள்ள எல்லா மூர்த்திகளினுடைய திருநாமங்களையும் உச்சரிக்கச் செய்தாராம். இந்தப் பெருமான் சுயம்புநாதராக எழுந்தருளியிருக்கின்றார். இவர் சக்தியின் பெயரோ ஸ்ரீ பவானி அம்மன்.

பங்குனி உத்திரவிழா இங்கு விசேஷம்.



## திருபுவனம்:

மூன்றும் குலோத்துங்கனது அன்பின் பெருக்கினையும் புகழின் பரப்பினையும் காட்டிக்கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கும் விமானத்தைப் பாருங்கள். அடி முதல் ஸ்தூபி வரையில் எல்லாம் கருங்கல் வேலைப்பாடுதான். ஒவ்வொரு சிற்பங்களையும் உற்றுநோக்கிக் கலையழகைக் காணுங்கள். இவ்விமானத்தைப் பார்க்கின்றபோது தஞ்சை ராஜராஜேச்சரமும் இப்படித்தானே என்ற எண்ணம் தோன்றுகிறது.

இந்த விமானத்தினுள் எழுந்தருளியிருப்பவர்தான் கம்பகரேஸ்வரர். திரிபுராதிகள் பூசித்துத் திரிபுரங்களைப் பெற்றதும் இங்குதான். வரகுணனுக்குங்கூட இங்குவந்த பிறகுதான் பிரமகத்தியால் ஏற்பட்ட நடுக்கம் நீங்கிற்று.

இரணியனைக்கொன்ற நரசிம்மமூர்த்தி, இரத்தவெறியினால் மயங்கினர். அவர்செய்த அட்டகாசத்தால் உலகமே நடுங்கியது. நடுங்கியவர்கள் நடுக்கம் தீர்த்த பெருமானைச் சரணடைந்தனர். துன்பம் துடைப்பானாகிய பெருமான் சரப உருவம் கொண்டார். சரபத்தைக் கண்டவுடன் நரசிம்மத்தின் வலிகுன்றியது.



இதோ சரபத்தின் பேருருவத்தைப் பாருங்கள். திருவடியில் நரசிம்மம் வலிகுன்றி அஞ்சலித்த கோலத்தோடு கிடப்பதையும் காண்கிறீர்கள். இச்சரபமூர்த்தியை நீங்கள் வேறு எங்கும் பார்க்கமுடியாது.

மீமாஞ்சை, தமிழ் முதலியன பயில்வதற்கு ஏற்றதான ஒருபெரிய யூனிவர்ஸிடியும் இங்கு இருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

## ஆச்சாள்புரம் :

Govt. Oriental Mss. Library
Triplicane P.O., Madr.

கொள்ளிடக்கரை என்ருல் யாருக்கும் குதூகலந்தான். காவிரியின் மூத்தபெண்ணுகக் காவிரியின் வளப்ப மெல்லா வற்றையும் வாங்கிவைத்துப் பேரழகோடு விளங்குவது இந்த ஆறு. இதன் தென்கரை சூரியன் புகாதபடி அவ்வளவு செறிவான சோலையும் சாலையும் உடையது. சோலைக்கு நடுவே சம்பந்த சுவாமிகள் திருமணஞ்செய்து மோக்ஷத்திற்குச் சென்ற தலமாகிய இது அமைந்திருக்கிறது. ஆச்சாள்—தலைவி, எல்லார்க்கும் மோக்ஷத்தை வழங்கிய தலைவி திருவெண்ணீற் றுமையாதலின் ஊர் ஆச்சாள்புரமாயிற்று. இறைவனே யாரும் அருமையாகப் பெறக்கூடிய சிவலோகத்தை அள்ளி வழங்கிய சிவலோகத் தியாகர்.

எல்லா ஊரிலும் அடியார் கூட்டத்தோடு விளங்கும் ஞானசம்பந்தர் இந்த ஊரிலே மனைவியோடு எழுந்தருளி யிருக்கின்ருர். மனைவி பெயர் தோத்திரபூர்ணியம்மை. ஆம். ஞானசம்பந்தர் இந்த அம்மையாரை மணந்து 'காதலாகிக் கசிந்து' என்ற பாடலைப் பாடியவுடனே ஸ்தோத்திரங்கள் பூரணமாகிவிட்டதல்லவா ?

இங்குள்ள பெருமானுக்கு, சம்பந்தருக்கு முன்னையும் கூட சிவலோகம் காட்டுவது பரம்பரை வழக்கம். வசிட்டர், பராசரர், பிருகு முதலிய மகரிஷிகள் பதினுயிரம் வருஷம் தவம் செய்தார்களாம். அவர்களுக்கும் சிவலோகம் காட்டினுர். அதுமட்டுமா ? முருகனுக்கும் பூதங்களுக்குங்கூடக் காட்டி னுர். மாந்தாதா என்ற மன்னன் வழிபட்டு இஷ்ட சித்திகளை எய்தினுன். சிவலோகத் தியாகர் சூலத்தால் உண்டாக்கப் பட்டது பஞ்சாக்ஷரதீர்த்தம். இதுதான் தெய்வத்தன்மை பொருந்தியது என எல்லாராலும் கொண்டாடப்படுகிறது.

ஆதியில் சந்திரசேகரன் பஞ்சநதிவாணனுன நெற்குன் றத்துக் கிழான், நாச்சியார் என்ற திருவெண்ணீற்றுமை கோயிலைத் திருப்பணி செய்வித்தவன்.

# திருக்குறுக்கை :



மிக அருமையான தென்னஞ்சோலையின் நடுவே தோன்று கின்ற இந்தக் கோபுரந்தான் ஆலயத்தின் முன்கோபுரம். இதற்குமுன் தெரிகின்ற தீர்த்தந்தான் சூலதீர்த்தம். கங்கை யினும் சிறப்புடையது. இதன் பெருமையறியாத தீர்க்கவாகு முனிவர் தலந்தோறும் செய்துவந்த வழக்கப்படி கங்காநீரை விரும்பி ஆகாயத்தில் கையைநீட்டினர். உடனே கை குறுகி விட்டது. விநாயகரைப் பார்த்தார். அவரும் 'என் கையும் அப்படித்தானே; பாரும்' என்று காட்டினர். என்செய்வார் முனிவர்? கல்லிடைத் தலையை மோதப்புகுந்தார் கல்லிலும் ஒருகை வெளிவந்து தடுத்தது. அருள்பெற்ற முனிவரும் குறுங்கை முனியானர்; விநாயகரும் குறுங்கை விநாயகர் ஆனர். குறுங்கை—குறுக்கை—கொறுக்கையாயிற்று,

இத்தலத்திற்கு மற்றொரு தனிச் சிறப்பும் உண்டு அட்ட வீரட்டத் தலங்களுள் மன்மதனை எரித்த தலம் இது என்று எண்ணும்போது பெருமான் யோக மூர்த்தியாகத்தானே இருக்கவேண்டும். ஆம். யோகீஸ்வரர்தான் அவருடைய

திருநாமம். மன்மதன் உருவமும் இரதி திருவுருவமும் இங்கு உள்ளன. கருப்பக்கிருகச் சுவரில்கூட, காமன் தேரிலேறி வருதல், புஷ்பபாணம் தொடுத்தல், இறைவன் யோகிருத்தல், விழித்தெரித்தல் முதலிய நிகழ்ச்சியைக் காட்டக்கூடிய சித்திரங்களை இன்றும் பார்க்கலாம். அதுமட்டுமா! ஆலயத்தின் வெளியே தென்மேற்கு மூலையில் மன்மத தகனம்செய்த இடத்தின் மண்ணை எடுத்தாலும் விபூதியாக இருப்பதைப் பார்க்கலாம். இன்னும் சற்றுதூரம் சென்று பார்த்தால் அம்பு எய்வதற்காக மன்மதன் கால்வளைத்து நின்ற காவளமேடு, பாணமெய்த பஞ்சபாணநல்லூர், வில்வளைத்த வில்லியநல்லூர் முதலிய இடப்பெயர்களும் நமக்குச் சாட்சிசொல்லும்.

## மாயூரம்-விசுவநாதர் கோயில்:

காவிரி இடபதீர்த்தக் கரையில் துலாக்கட்டத்தில் விசுவநாதர் இலிங்கத் திருமேனியாய் எழுந்தருளியிருக்கிறார். காசி செல்ல முடியாதவர்கள், இடபதீர்த்தத்தில் மூழ்கிச் சிரார்த்தாதிகளைச்செய்து, இன்றும் பிதிர்க்கடனாற்றிக் கொள்கிறார்கள். விசுவநாதர் என்றவுடன் காசிநகர் அன்பர்கள் நினைவுக்கு வருகின்றதல்லவா? ஆம். இதுவும் காசிதான்.

இங்கும் அன்னபூரணி யம்மையார் விசுவநாதருடன் எழுந்தருளியிருந்து, அனைவர்க்கும் அருள் வழங்குகின்றார், அங்கும் துண்டி விநாயகர்; இங்கும் அப்படியே அவரைப் பார்க்கலாம். இன்னும் பயிரவவரையும் தரிசிக்கலாம். இப்படிக் காசியிலுள்ள மூர்த்திகள் யாவருமே இங்கு வந்த பிறகு இளையபிள்ளைமட்டும் அங்கு எப்படித் தனித்திருக்கமுடியும்? அவரும் இங்கு வந்துவிட்டார். அவர் கோயிலின் முகப்பிலேயே உயர்ந்த மண்டபத்தில் பாலதண்டபாணியாகக் காட்சி வழங்குகிறார். இவர் திருவுருவம் கண்டு களித்தற்குரியது.



## மாயூரம்—வள்ளலார் கோயில் :

இங்கு, தக்ஷிணாமூர்த்தி வழிபாடு சிறப்புடையது. குரு வாரந்தோறும் மக்கள் கூட்டமாக வந்து வழிபடுகின்றார்கள். "பெருமானுக்கு நாமல்லவா வாகனமாயிருந்து சுமக்கிறோம்" என்று ஒருசமயம் கர்வங்கொண்டார் இடபதேவர். கருத்தறிந்த பெருமான் தமது ஒரு திருச்சடையின் நுனி ஒன்றை அவர் முதுகிலிடவே, சுமக்கமுடியாமல் வருந்தினார். பிழை பொறுக்க வேண்டினார். பெருமானும் ஞானோபதேசம் செய்தார். இந்த அவசரந்தான் உபதேசத் திருக்கோலம். நந்தி மீது யோகாசனத்தில் ஞானமுத்திரையுடன் வீற்றிருப்பதைக் காணலாம். அதோ பிராகாரத்தில் தெரிகிற வெளவால் நத்தி மண்டபந்தான் குருமூர்த்தி சந்நிதி.

காவிரி தீர்த்தம் விசேடம். கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகியோர்கள்கூட இங்குவந்து காவிரியில் மூழ்கித் தங்கள் பாவத்தைப் போக்கிக்கொண்டார்களாம். ஐப்பசிமாத அமாவாசை தீர்த்த விசேஷம்.

இறைவர் வதாங்யேஸ்வரர், அம்மையார் ஞானாம்பிகை. ஆலயம் மாயூரம் காவிரி துலாக்கட்டத்தின் வடபாலுள்ளது.

## தென் திருமுல்லைவாயில்:

பொழில்வளஞ் சிறந்து விளங்கும் இத்தலத்திற்குச் சென்ற நம் திருஞானசம்பந்தப் பெருமான் 'களி மண்டு சோலை கழனிக்கலந்து கமலங்கள் தங்கு மதுவின் தெளிமண்டி உண்டு சிறைவண்டு பாடும் திருமுல்லை வாயில் இதுவே' என்று என்ன ஆனந்தமாகப் பாடுகிறார். அவருக்குத்தானு ஆனந்தம். பாட்டைக் கேட்டால் கேட்போருக்கும் ஆனந்தம். ஒருமுறை திருப்பிப் படிப்போர்க்கும் ஆனந்தமல்லவா!

பஞ்சாக்ஷர உபதேசம்பெற்ற அம்மையார்கூட இங்கு வந்து வழிபாடாற்றிய பிறகுதான் அந்த உபதேச அனுபவம் கைவரப்பெற்றார். தலவிருக்ஷம் முல்லைக்கொடி, தீர்த்தம் சந்திர தீர்த்தம்,

மக்கள் மகோதய புண்ணியகாலத்திலும், கிரஹண காலங்களிலும் இங்குவந்து இன்றும் கடலாடுகின்றார்கள்.

மாசிமகவிழா இங்குச் சிறப்பு, தஞ்சையையாண்ட ஸ்ரீ கிருஷ்ணதேவ மகாராயர் காலத்திய (சகாப்தம் 1685) செப்புப் பட்டயங்கள் சில இக்கோயிலின் தருமசெயலைக் காட்டுகின்றன. அவைகளில் பெருமான் ஸ்ரீ முல்லைவனநாதத் தம்பிரான் என்று குறிப்பிடப் பெறுகிறார்.

## மாயூரம்—குமரக்கட்டளை:

ஆயிரமானாலும் மாயூரமாகாதல்லவா? மயில் வடிவொடு வந்து நம்மைப் பூசிக்க; நாம் அப்பொழுது அங்கு மயிலாக வருகிறோம் என்று இறைவன் ஒருகாலத்தில் உமைக்கு அருளினாராம். உமையம்மையும் அப்படியே தோழியர்களும் மயிலாக உடன்வரத் தாமும் மயிலுருக்கொண்டு இங்குவந்து பூசித்து வழிபட்டனர். அதனால் வந்தபெயர்தான் மாயூரம். மாயூரத்திலுள்ள பெருமான் மாயூரநாதர். இப்பெருமான் கௌரிதாண்டவம் செய்து தேவர்களுக்கெல்லாம் அருள் பாலித்தார்.

ஐப்பசித் திருவிழா இங்கு சிறப்பு. மழைக்காலத்தையும் மக்கள் பொருட்படுத்தாது, நாடோறும் விடியலில் காவிரி நீராடி வழிபடுவது அவர்கள் அன்பின் பெருக்கினைக் காட்டு கின்றதல்லவா ?

இங்கு முருகப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராய் மயில்மீது ஒரு திருமுகத்துடன், கரத்தில் வேலேந்திக் காட்சி யளிக்கின்றார். கந்தர்சஷ்டி உத்ஸவம் இவருக்கு விமரிசையாக நடைபெறுகிறது.

## திருவிடைமருதூர்-பிச்சைக்கட்டளை :

இங்குள்ள இலிங்கம் மகாலிங்கம். ஒரு காலத்தில் விநாயகப்பெருமானே தந்தை கட்டளைப்படி ஆட்சிநடத்தினா ராம். அதுமுதல் அவர் ஆண்டபிள்ளையாரானார். சோழனுக்கு பிரமஹத்தி நீங்கியது இத்தலத்திலேதான். பயித்தியம்பிடித்த மக்கள் இங்குவந்து ஒரு மண்டலம் நீராடி வழிபட்டு வலம் வந்து நிவர்த்திசெய்துகொள்ளுதலை இன்றும் பிரத்யக்ஷமாகக் காணலாம். ஸ்தலவிருக்ஷம் மருதமரம்.

சிற்பக் கலையையும் கல்வெட்டுக்களையும் இவ்வாலயம் தாங்கி நிற்கிறது. வரகுணபாண்டியன் மனத்தைப் பிணித்த பெருமானும் இவர்தான். பட்டினத்தடிகள். பத்திரகிரியார் உள்ளிட்ட பல சிவஞானச் செல்வர்களும் ஸ்தலவாசிகளாக இருந்திருக்கிறார்கள்.

இங்குள்ள பிச்சைக்கட்டளை நிர்வாகம் தருமையாதீன பரிபாலனத்தின் ஆளுகைக்கு உட்பட்டது. ஆதித்தன் பிச்சன் என்பான் சிலகோயில்கட்குக் கட்டளைகள் ஏற்படுத்தியிருக் கிறான். ஆதித்தன் பிச்சன் கட்டளை பிச்சக்கட்டளையாகி, நாளாவட்டத்தில் பிச்சைக்கட்டளையாகிவிட்டதுபோலும்.



## கற்குடி:

இதுதான் கற்குடி மாமலை! இறைவன் கல்லில்தானே இங்குக் குடியிருக்கிறார். இவர் திருநாமம் உய்யக்கொண்டான். எல்லா ஆன்மாக்களையும் நன்னெறி உய்யச்செய்து ஆட்கொள்கின்றான் அல்லவா? இம்மலைக்கோயில் நந்திவர்மப் பல்லவனது திருப்பணி.

பெருமான் கற்பகநாதராக வீற்றிருப்பதைக் கண்டிருக்கிறார்போலும் அப்பர் சுவாமிகள். 'கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்' என்று அவர் ஆனந்தமடைகிறார். எல்லாப் பொருளிலும் சிறந்தபொருள் பரம்பொருளல்லவா! பரம்பொருளை விழுமிய பொருளாகக்கண்ட திருஞானசம்பந்தர் 'கற்குடியில் விழுமியானே' என்று கூப்பிடுகின்றார். விழுமிய நாயனார், விழுமிய தேவர் என்ற தொடர்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன மலையினுச்சியில் பெருமான் விளங்குவதால் உச்சிநாதர் எனவும் அழைக்கப்படுகிறார்

காற்றால் அலைக்கப்படுகின்ற செந்நெற் பசும் பயிர்களுக்கு நடுவில் இம்மலை விளங்குவதைக் காணும்போது, கடல்நடுவே விளங்கும் மரக்கலத்தை அன்பர்கள் நினைவுக்குக் கொண்டு வருகின்றதல்லவா?



## தலைஞாயிறு:

இதோ தெரிகின்ற மலை கட்டு மலை. சீகாழியைப் போலவே சட்டைநாதர் இங்கும் இம்மலையுச்சியில் எழுந்தருளி யிருக்கிறார். அழகான சிற்பங்கள் பல காட்சியளிக்கின்றன. இதற்கு மேலைக்காழி என்றபெயரும் உண்டு. ஆதிசேடனும் வாயுவும் ஒருகாலத்தில் சண்டையிட்டுக் கொண்டபோது ஆதிசேடன் தன் படங்களால் கயிலைச் சிகரங்களை அமுக்கிக்கொண்டான். வாயு பெரும் புயலாகமாறிச் சிகரங்களைப் பிய்த்தெறிந்து தன் வலிமையைக் காட்டினானாம். அப்படி எறியப்பட்ட சிகரங்களுள் இம்மலையும் ஒன்று.

தக்கன் யாகத்திற்குச் சென்று பல் இழந்த சூரியன் இங்கு வழிபட்டுத் தலைஞாயிறானான். அகத்தியர், அநுமன், இராவணன் முதலியோர்களும் வணங்கிப் பேறு பெற்றிருக்கிறார்கள். அன்று முதல் வழிபடுவார் குற்றங்களையெல்லாம் பொறுத்துக் குற்றம்பொறுத்த நாதராக கோல்வளை யம்மையாருடன் வீற்றிருக்கின்றார் பெருமான்.

அகத்தியரது கமண்டலநீரை விநாயகர் காகவடிவு கொண்டு கவிழ்த்தபோது பெருகி ஓடிவந்த நதி விநாயகநதி என்ற பெயருடன் மேல்பாலும் வடபாலும் அழகுசெய்கிறது. இதுவும் ஒரு தீர்த்தம். இதில் மூழ்கிப் பெருமானை வழிபட்டால் மிகுந்த பயன் உண்டு.

இத்தலப்பெயர் திருக்கருப்பறியலூர் எனத் தேவாரத்தில் குறிப்பிடப்பெறுகிறது.

## திருக்கோளிலி :

என்ன அருமையான பெயர். கோள்களினுடைய வலி யடங்கிய தலம். பிரமதேவன் சிருஷ்டித்தொழில் வேண்டி இங்கு வந்து பூசித்தானும்.

குண்டையூர் கிழார் சிவபெருமான் அருளால் தமக்குக் கொடுத்த நெற்குவியலை எடுத்துச்செல்ல, சுந்தரர் இப்பெருமானிடத்தில்தான் ஆள்வேண்டி விண்ணப்பித்துக்கொண்டார். இந்த ஐதிகத் திருவிழா மாசிமகத்தில் நடைபெறுகின்றது.

சப்தவிடத் தலங்களுள் இது அவனிவிடங்கத்தலம். தியாகேசப்பெருமான் திருவுருவம் மிக அழகானது. முசுகுந்த சக்ரவர்த்தி தேவேந்திரன்பால் பெற்றுக் கொண்டுவந்த மூர்த்தி இத்தியாகேசமூர்த்தி.

இங்குள்ள இறைவர் திருநாமம் பிரமபுரீசர். வண்டமர் பூங்குழலாள் என்பது அம்மையின் திருநாமம்.

விநாயகரும் தியாக விநாயகராம். முருகனே சுந்தர வடிவேலர்.

தியாகேசர் சந்நிதிக்குச்சென்றால் அங்கு சுந்தரமூர்த்திகள் மனைவி பரவையாருடன் நின்று சேவித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். தலப்பெயருக்கு ஏற்ப நவக்கிரகங்கள் ஒருமுகமாய் வரிசையாக இருக்கின்றன. 'கோளாய நீக்கு மவன் கோளிலி எம்பெருமானே' என்று திருஞானசம்பந்த சுவாமிகள் தலப்பெயருக்கு விளக்கம் கூறுகிறார்கள்,

சோழ பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் பல இக்கோயிலில் உள்ளன. ஆலன் என்னும் பரதவன் அதிபத்த நாயனார் திருவுருவத்தை இக்கோயிலில் பிரதிஷ்டை செய்வித்து, பூசைக்கு வேண்டிய நிபந்தங்களும் கொடுத்துவரச்செய்தான் என்ற அற்புதமான செய்தியை மூன்றும் ராசராசன் கல்வெட்டு காட்டுகிறது.



சிற்பங்களுக்கும் இவ்வாலயம் உறைவிடமாயிருக்கிறது. இதோ ஒரு காட்சிப் பாருங்கள். தேற்ருமரத்தின்கீழ்ப் பெருமான் இருக்கிருர். பிரமன் பூசிக்கிருன், தருமர் சேவிக்கிருர். அடுத்து ஒவ்வொரு உருவமாக உற்றுப்பாருங்கள். வீமன் கையில் கதை, அருச்சுனன் கரத்தில் வில், அடுத்து நகுலன், சகாதேவன், கடைசியாகக் குந்தி, அவளுக்குப் பக்கத்தே இரண்டாவதாகத் திரௌபதையும் நின்று சேவிக்கிறதைப் பார்க்கலாம். இப்படிப் பாண்டவர்களும் வந்து புசித்த வரலாற்றுச் சிற்பம் திருமதிலில் உள்ளது. இன்றும் சென்ருல் பார்க்கலாம்.

சுவாமி கருப்பக்கிருகத்தில் அமைந்துள்ள அர்த்தநாரீஸ்வர வடிவமும், சங்கு சக்கிரதாரியாகிய விஷ்ணு வடிவமும், சிற்பக்கலைக்கு உயிராக விளங்குவதை வலம் வரும்போது காணுங்கள்.

இந்திரன், அகஸ்தியர், முசுகுந்தன், ஓமகாந்த மன்னன் ஆகியவர்களும் இங்கு வந்து பூசித்தும், வழிபட்டும் பல பேறுகள் பெற்றுள்ளார்கள்.

இச்சிறப்புக்கள் பொருந்திய தலப்பெயர் காலவேக வழக் காற்றில் உருவம்மாறி திருக்குவளை யாகிவிட்டது.

# திருச்சி—மௌனமடம் :

திருச்சி ஆதிகாலந்தொட்டே சைவத் தலைநகராகவும், சோழமன்னர்கள் உறைவிடமாகவும் விளங்கிவருகிறது. திரிசிரன் என்னும் அரக்கன் பூசித்துப் பேறுபெற்ற தலம். கோயிலைக் கட்டியவன் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த மகேந்திரவர்மன். இங்கே உச்சிப்பிள்ளையார் கோயில் விசேஷம். மலைக்கோட்டை வாசலில் உள்ள விநாயகரும் எல்லாரையும் வலிய ஆட்கொண்டு வழியனுப்புகிருர்.

இறைவன் பெயர் திருமலைக்கொழுந்தர் ; தாயுமானவர். அம்மை பெயர் மட்டுவார்குழலம்மை.

ஒரு பூ வியாபாரி நந்தவனத்திலுள்ள செவ்வந்திப் பூவைத் திருடிவிட்டான். அதனைத் தெரிந்தும் முதற் பராந்தகன் அவனைக் கண்டிக்கவில்லை. நந்தவனத்திற்கு உரிமையாளரான சாரமாமுனிவர், இதனைக்கண்டு பெருமானிடம் விண்ணப்பித்துக்கொண்டார். பெருமான் மேற்கு முகமாகத் திரும்பிவிட்டார். நகரழிந்தது; மன்னனும் அழிந்தான். அவன் மனைவி காவிரியில் வீழ்ந்தாள். அவளை ஒரு அந்தணன் காப்பாற்றிஞன். அவள் வயிற்றில் பிறந்தவனே கரிகாலன். அவன் மனைவி காந்திமதிக்கு இறைவன் காட்சி வழங்கிஞர்.

இரத்திஞவதி என்ற செட்டிப்பெண் கருவுயிர்க்கக் கஷ்டப்பட்டாள். அவளுடைய பெற்றதாயை வரவிடாமல் காவிரி வெள்ளம் தடுத்தது. இரத்திஞவதியின் பக்திக்கு இரங்கிய பெருமான் தானே தாயாக எழுந்தருளி மருத்துவம் பார்த்துத் தாயும் ஆஞர் என்பது வரலாறு.

இத்தலத்துள்ள சிறந்த ஞானஸ்தலம் மௌனமடம். மௌனமடத்தில் தாயுமான அடிகளுடைய ஞானகுருவாகிய மௌனகுரு வசித்தார்கள். மௌனகுரு தாயுமானவருக்கு உபதேசித்த இடங்கூட இங்குள்ள பூசைமடந்தான் என்பது கர்ணபரம்பரை.

# திருவாரூர்—இராஜாங்கக்கட்டளை :

பஞ்சபூத .ஸ்தலங்களுள் இது பிருதிவிஸ்தலம். சப்த விடங்க ஸ்தலங்களுள் முதன்மையானது. இந்தக் கோயிலுக்குள் ஒருவர் புகுந்துவிட்டால் கும்பிட்ட கையைப் பிரிக்க முடியாதபடி வலம்வர வேண்டியதுதான். அவ்வளவு கோயில்கள் நிரம்பியுள்ளன.

இங்குள்ள ஆயிரக்கால்மண்டபம் தேவாசிரய மண்டபம் எனப்படும். திருத்தொண்டத் தொகையிலுள்ள சிவனடியார்கள் இதில்தான் கூடியிருந்தார்களாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர்கள்மீது திருத்தொண்டத்தொகை பாடித் துதித்தார். சுந்தரர் பரவையாரை மணந்து எழுந்தருளியிருந்த இடமும், செல்வத் தியாகேசப் பெருமான் தம்பிரான் தோழராக அவரை ஏற்றுக்கொண்ட தலமும் இதுவே.

மனுச்சோழன் தன்மகனைத் தேர்க்காலில்கிடத்திக் கன்றிழந்த பசுவுக்கும் நீதிவழங்கிய இடம். இத்தலத்திற்கு வரும் அன்பர்கள் மனுச்சோழன் ஊர்ந்த தேரையும், கன்றிழந்து கவலையுடன் நிற்கும் பசுவையும் விட்டவாசலில் சிற்பத்தில் காணலாம். இத்தலத்துக் கல்வெட்டில் (164 of 1894) மனுச்சரிதம் முழுதும் குறிப்பிட்டிருத்தலைக் காணலாம்.

பஞ்சமுக வாத்தியம், பாரிநாயனம், சுத்தமத்தளம் என்பன இத்தலத்துச் சிறந்த வாத்தியங்கள்.

சுவாமி பெயர் வன்மீகநாதர் தவத் திருக்கோலங்கொண்டு வடமேற்கு மூலையில் கமலாம்பிகை எழுந்தருளியிருக்கிறார். சக்திப் பிராதான்ய ஸ்தலங்களுள் இதுவும் ஒன்றாதலின் சக்திபுரம் என்ற பெயரும் இதற்கு உண்டு.

கோயிலின் வடபால் உள்ள கமலாலயம் தேவதீர்த்தம் எனப்படும். இது ஐந்து வேலி பரப்புள்ளது.



இதோ நீலோத்பலாம்பிகை திருவுருவத்தைப் பாருங்கள். தோழி, பக்கத்தில் தோள்மீது முருகனைச் சுமந்து நிற்கிறாள். அம்மையார் இடது கரத்தால் முருகனது சுட்டுவிரலைப் பற்றி நிற்கிறார். இவரது திருக்கோயில் வன்மீகநாதர் கோயிலுக்கு இடதுபுறத்திலுள்ளது.



இவர்தான் சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி. தருமை ஆதீன ஆதி குருமூர்த்தியாகிய குருஞானசம்பந்தப் பெருமானுக்குக் கமலை ஞானப்பிரகாசர் இந்த தக்ஷிணாமூர்த்தி முன்தான் உபதேசம் செய்தருளினார்கள்.

கமலை ஞானப்பிரகாசருக்குத் தஞ்சை மன்னன் கிருஷ்ண தேவராயன் அளித்த தேவதானங்கள் இராஜாங்கக் கட்டளை என்ற பெயரோடு வழங்கி வருகின்றன. இது தருமபுர ஆதீன நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

# தருமபுரம்—தருமபுரீஸ்வரர் கோயில்:



இதோ தெரிகிறதுதான் ஆலயத்தின் முகப்புத் திருவாயில். முன்னுள்ள சிறிய விமானத்தோடுகூடிய மண்டபந்தான் விநாயகர் ஆலயம்.

திருக்கடவூரில் மார்க்கண்டர் அமுதகடேசுவரரைப் பூசித்துக் கொண்டிருக்கும்போது இயமன்வந்து கோபத்தோடு பாசத்தை வீசினனல்லவா! வீசிய பாசம் இலிங்கத் திருமேனியிலும்பட்டது. அந்த சிவாபராதத்தைப் போக்கிக் கொள்ள இங்குவந்து பூசித்து வழிபட்டான். இறைவன் தர்மபுரீஸ்வரரானர்.

இயமன் திருஉருவத்தை இக்கோயிலில் இன்றும் காணலாம். விருக்ஷம் வில்வம். இதுதான் அகத்தியாச்சிரமமாக குருஞானசம்பந்தர் காலத்தில் விளங்கியது.



## தருமபுரம்—ஞானபுரீஸ்வரர் கோயில்:

இது தருமையில் உள்ளது. உயரமாகத் தெரிவதுதான் பெருமான் வீற்றிருக்கின்ற கருப்பக்கிருக விமானம். அடுத்துத்தோன்றும் சிறிய விமானத்தினுள் தாதைதாள் தடிந்த சண்டீசர் எழுந்தருளியிருக்கிறார்.

ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் சிவசமாதி எய்தியது இங்குதான். இக்கோயிலை முதன்முதலில் கட்டி முடித்தவர்கள் நான்காவது குருமூர்த்திகளாக விளங்கிய மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

சிவாகம விதிப்படி ஆதி சைவர்களைக்கொண்டு நித்திய பூஜைகள் நடத்துவிக்கப்படுகின்றன. வைகாசியில் குருபூஜை விழாவைச்சார்ந்த பத்துநாட்களிலும் உற்சவம் நடைபெறுகிறது. இந்தக்கோயில் ஆதீன மடாலயத்தின் வடபால் விளங்குகிறது.

# ஆதீனப் பணிகள்

இதுவரையில் நீங்கள் பார்த்துக்கொண்டு வந்த தேவஸ்தானங்கள்—கட்டளைகள் ஆகியன தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தில் இருந்துவருகின்றன. இப்போது இந்த ஆதீனத்தில் இருபத்தைந்தாவது ஞானபீடாதிபதியாய் எழுந்தருளியிருந்து அருளாட்சி நடாத்துகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆட்சி ஏற்று எட்டு ஆகளாகின்றன. அவர்கள் இயற்றிவரும் பணிகள் பின்வருவன :—

**கல்விப் பணிகள் :**

(1) தேவாரபாடசாலை, (2) சிவாகமபாடசாலை, (3) தமிழ்க்கல்லூரி, (4) வடமொழிக்கல்லூரி, (5) இசைக்கல்லூரி, (6) ஓரியண்டல் நடுத்தரப்பள்ளி, (7) ஆரம்ப பாடசாலை, (8) புத்தகசாலைகள்.

**சமயப் பணிகள் :**

(1) சிவஞான நூல் வெளியீடு. (2) இலக்கண இலக்கிய வெளியீடு, (3) சமய நுணுக்க நூல்கள் வெளியீடு. (4) விஞ்ஞான நூல்கள் வெளியீடு (5) தலத்திருப்பதிக உரை வெளியீடு, (6) கோயில்களில் அறிஞர் அறவுரை, (7) பிரசார வாகனத் தொண்டு, (8) கோயில்களில் தேவாரவகுப்பு, (9) நூலாராய்ச்சி வெளியீடு, (10) மாதப் பத்திரிகைத் தொண்டு, (11) சமயமாநாடுகள், (12) தலவரலாறு வெளியீடு.

**சமூகப்பணிகள் :**

(1) குடிதண்ணீர் வசதி, (2) ஏழை மாணவர் உதவி, (3) மொழிப்பணி செய்வோர்க்குதவி, (4) ஹரிஜன மாணவர்களுக்கு அன்னம், (7) குடிமக்கட்கு எண்ணெய் முழுக்கும் அன்னமும், (6) பள்ளிக்கூடங்களிலிருந்து உல்லாசப்பிரயாணம் வருவோர்க்கு உதவி, (7) ஆங்கிலக்கலாசாலைகளில் தமிழ்ப்பரிசு.

**ஆலயப்பணிகள் :**

(1) பாடல்பெற்ற தலங்கள்தோறும் அபிஷேக ஆராதனைகள், (2) கும்பாபிஷேக உதவிகள், (3) கும்பாபிஷேகங்கள்.

Govt. Oriental Mss. Library,

(4) ஆலயத் திருப்பணிக்கு உதவிகள், (5) யாத்திரைகள், (6) யாத்திரீகர்களுக்கு உதவிகள்.

**ஒற்றுமைப்பணிகள் ;**

(1) சர்வசமய தத்துவ ஆராய்ச்சி மாநாடு, (2) மடாதிபதிகளுடன் சமய ஆலோசனை.

**பொதுநலப்பணிகள் ;**

(1) கூட்டுறவுப் பண்டகசாலை, (2) அநாதை விடுதி, (3) பிரசவ மருத்துவச்சாலை, (4) காசநோய் விடுதி உதவி, (5) அகதிகள் நிவாரணநிதி உதவி, (6) காந்தி நிதி உதவி, (7) குளம்வெட்ட உதவி, (8) மாநாடுகட்கு உதவி.

**பிரசாரப்பணிகள் :**

(1) சேரிப் பிரசாரம், (2) பள்ளிகளில் பிரசாரம், (3) நகரப் பிரசாரம், (4) சிறைப் பள்ளிகளில் பிரசாரம்.



இதோ ஏழைகள் நீராடி திருநீறு பூசிக்கொண்டு ஆர்வத்தோடு வரிசை வரிசையாக அமர்ந்து அறுசுவை உணவு உண்ணுதலைப் பாருங்கள். இந்த இடந்தான் ஆதீன மடாலய முகப்பு.



இப்படி அடிக்கடி அன்னதானங்களும், ஏழைகளுக்கு எண்ணெய் வார்த்தலும் நடைபெற்று வருகின்றன. இத்தருமம் ஆதீன மடாலயத்தில்மாத்திரமா? இல்லை, இல்லை. ஆதீன தேவஸ்தானங்களிலும் கூட ஏழைகளுக்கு அன்னம் வழங்குகிறார்கள் சாப்பிட்ட ஏழைகள் சந்தனம் பூசிக்கொண்டு குதூகலமாக நிற்கின்ற காட்சியையும் இதோ படத்தில் பாருங்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இவ்வளவு பணிகளோடு வைத்தீஸ்வரன் கோயிலில் அநாதை விடுதியொன்று நிறுவிப் பரிபாலித்து வருகிறார்கள். இந்தக்காலத்து எல்லார் மனத்திலும் கடவுள் நம்பிக்கை உண்டாகவேண்டும் என்ற பெருநோக்கால் ஆதீன தேவஸ்தான விழாக்கள்தோறும், வெளியூர் உற்சவங்களிலும் பிரசார வாகனத்தை அனுப்பிப் பிரசாரம்செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

சமயப் பிரசார நிலையத்தையும், தலைநகராகிய சென்னையில் நிறுவியிருக்கிறார்கள். சென்னை ராஜ்ய முதல் மந்திரி கனம் ஸ்ரீ இராஜாஜீ அவர்கள் திறந்துவைக்கிறார்கள்.

நிலையம் நீடுழி வாழ்க.

Govt. Oriental Mss. Library
Triplicane P.O., Madras

# நீங்கள் தரிசிக்கலாம்;

**1. தருமபுர ஆதீனம்:**

மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 4 மைல் தூரத்திலுள்ளது,

**2. வைத்தீஸ்வரன்கோயில்:**

சென்னை மாயூரம் மெயின் லயனில் உள்ள ஸ்டேஷன். இதுதான் புள்ளிருக்குவேளூர். சம்பந்தரும் அப்பரும் பாடியது. பதிகம் மூன்று.

**3. சீகாழி:**

இதுவும் சென்னை மாயூரம் மெயின் லயனில் உள்ள ஸ்டேஷன். சம்பந்தசுவாமிகள் அவதரித்த தலம். மூவர் பதிகம் உண்டு. பதிகம் 71.

**4. திருப்பனந்தாள்:**

மெயின் லயனில் ஆடுதுறை ஸ்டேஷனில் இறங்கி வடக்கே ஆறுமைல் சென்று சேரலாம். கும்பகோணம், குத்தாலம் ஸ்டேஷன்களிலிருந்தும் பஸ் வசதி உண்டு. சம்பந்தர் பதிகம் 1 உள்ளது.

**5. திருக்கடவூர்:**

மாயூரம் தரங்கம்பாடி கிளைப்பாதையில் உள்ள ஸ்டேஷன், மாயூரம் இருந்து பஸ்வசதி நிரம்ப உண்டு. மூவர் பதிகமும் பெற்றது. பதிகம் 5.

**6. திருப்பறியலூர்:**

மாயூரம் தரங்கம்பாடி கிளைப்பாதையில் செம்பொனர் கோயிலில் இறங்கித் தென்மேற்கு மூலையாக $1\frac{1}{4}$ மைல் சென்றால் அடையலாம். பரசலூர் என்றால்தான் மக்களுக்குத் தெரியும். சம்பந்தர் பதிகம் 1.

**7. குத்தாலம் :**

மாயூரம் திருச்சி மெயின் லயனில் உள்ள ஸ்டேஷன். மூவர் பாடல்பெற்றது தேவாரத்தில் திருத்துருத்தி என வழங்கப் படும். பதிகம் 3.

**8. திருநின்றியூர் :**

மாயூரமிருந்து சீகாழிசெல்லும் கற்சாலையில் 6-மைல் தூரத்தில் உள்ளது. பஸ் வசதியுண்டு. மூவர் பாடலும் பெற்றது. பதிகம் 4.

**9. திருத்தருமபுரம் :**

காரைக்காலுக்கு மேற்கே ஒருமைல் தூரத்தில் உள்ளது. சம்பந்தர் பாடியது. பதிகம் 1.

**10. திருவையாறு :**

தஞ்சாவூரிலிருந்து வடக்கே 8 மைல் தூரத்தில் உள்ளது. பஸ் வசதியுண்டு. மூவர் பாடலும் பெற்றது. பதிகம் 18.

**11. மணக்குடி :**

மாயூரம் டவுனிலிருந்து கிழக்கே மட்சாலையில் 2-மைல் தூரத்தில் உள்ளது.

**12. கருங்குயில்நாதன்பேட்டை :**

இது ஷை மணக்குடியிலிருந்து மேற்கே ½-மைல் தூரத்தில் உள்ளது.

**13. திருவிளநகர் :**

மாயூரத்திற்குக் கிழக்கே கற்சாலையில் 4½ மைல் தூரத்தில் உள்ளது. பஸ் வசதியுண்டு. சம்பந்தர் பதிகம் 1.

**14. திருநள்ளாறு :**

பேரளம் காரைக்கால் லயனில் உள்ள ஸ்டேஷன். சனி பகவான் விசேஷம். மூவர் பாடலும் உண்டு. பதிகம் 7.

**15. போளம் :**

மாயூரம் திருவாரூர் கிளைப்பாதையில் உள்ள ஸ்டேஷன்.

**16. திருபுவனம் :**

மாயூரம் திருச்சி மெயின் லயனில் திருவிடைமருதூருக்கு மேற்கே 2-மைல் தூரத்தில் உள்ளது. சரப க்ஷேத்திரம்.

**17. ஆச்சாள்புரம் :**

சென்னை மாயூரம் மெயின்லயனில் கொள்ளிடம் ஸ்டேஷனிலிருந்து கிழக்கே 4-மைல் தூரத்தில் உள்ளது நல்லூர்ப் பெருமணம் என்பது தேவாரத்தில் கண்ட பெயர். சம்பந்தர் திருமணம் நடந்த தலம். அவர் பாடிய பதிகம் 1.

**18. குறுக்கை :**

மெயின் லயனில் நீடூர் ஸ்டேஷனிலிருந்து மேற்கே 5-மைல் தூரத்தில் உள்ளது. அப்பர் பதிகம் 2.

**19. மாயூரம்—விஸ்வநாதர்கோயில் :**

இது மாயூரம் காவிரித் துலாக்கட்டத்தில் உள்ளது. காசிக்குச் சமமான க்ஷேத்திரம்.

**20. மாயூரம்—வள்ளலார்கோயில் :**

மாயூரம் துலாக் கட்டத்திற்கு வடபால் உள்ளது. தட்சிணா மூர்த்தி விசேஷம்.

**21. திருமுல்லைவாயில் :**

சீகாழி ஸ்டேஷனுக்குக் கிழக்கே 8 மைல் தூரத்தில் இருக்கிறது. சம்பந்தர் பதிகம் 1.

**22. மாயூரம்—குமரக்கட்டளை :**

மாயூரம் டவுனில் மாயூரநாதஸ்வாமி கோயிலில் உள்ளது. சுப்பிரமணியர் ஸ்தலம்.

**23. திருவிடை மருதூர்—பிச்சைக்கட்டளை :**

திருவிடைமருதூர் மகாலிங்க ஸ்வாமி தேவஸ்தானத்தில் ஒரு பகுதி. மூவரும் பாடியது. பதிகம் 12.

**24. திருக்கற்குடி :**

உய்யக்கொண்டான் என இப்பொழுது பெயர் வழங்கு கிறது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 3-மைல் தூரத்தில் உள்ளது. மூவர் பாடலும்பெற்றது. பதிகம் 3.

**25. தலைஞாயிறு :**

திருக்கருப்பறியலூர் என்பது தேவாரப் பதிகத்தில் கண்ட பெயர். வைத்தீஸ்வரன்கோயில் ஸ்டேஷனிலிருந்து 5-மைல் தூரத்தில் உள்ளது. சம்பந்தர், சுந்தரர் பாடியது. பதிகம் 2.

**26. திருக்கோளிலி :**

திருக்குவளை என்றால்தான் இப்பொழுது தெரியும். திருவா ரூரிலிருந்து அறந்தாங்கி லயனில் திருநெல்லிக்காவலிலிருந்து கிழக்கே 7-மைல் தூரத்தில் உள்ளது மூவர் பாடலும்பெற்றது. பதிகம் 4.

**27. திருச்சி—மௌனமடம் :**

திருச்சி டவுன் ஸ்டேஷனிருந்து ½ மைல். சம்பந்தரும், அப்பரும் பாடியது. பதிகம் 2.

**28. திருவாரூர்—இராஜாங்கக்கட்டளை :**

திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து ½-மைல் தூரத்தில் உள்ளது. மூவர் பாடலும்பெற்றது. பதிகம் 34.

**29. தருமபுரம்—தருமபுரீசர் கோயில் :**

தருமபுர ஆதீனம் மடாலய வடக்கு முகப்புக்கு அருகில் உள்ளது.

**30. தருமபுரம்—ஞானபுரீசர் கோயில் :**

இதுவும் மடாலயத்திற்குப் பக்கத்தில் உள்ளது. இங்கு தான் ஆதீன ஸ்தாபகர் குருபூஜையைச்சார முன் பத்துநாளும் உத்ஸவம் நிகழும்.

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
30 SEP 1953
TRIPLICANE P.O., MADRAS

தருமையில்



சித்திவிநாயகர் ஆலயம்

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம்.